Vol. 5, Issue-1, June 2021 P.No. : 48 - 55

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

SACRED HEART RESEARCH PUBLICATIONS

http://shcpub.edu.in

**ல.கு.சு.இராஜ்குமார்**
**முனைவர்பட்ட ஆய்வாளர்**
தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
சேர்க்காடு, வேலூர் - 632 115.

---

**தலைப்பு :** கலித்தொகையில் திருமணப் பண்பாடு

---

கலித்தொகை சங்கத் தமிழரின் பண்பாட்டு கருவூலமாகத் திகழ்கிறது. அக இலக்கியமான கலித்தொகையில் தமிழரின் திருமண முறைகளை எடுத்துரைப்பதன் மூலம் நமது திருமணப் பண்பாட்டை இத்தலைமுறையினர் அறிய இக்கட்டுரை வழிவகுக்கும். பண்பாடு என்னும் சொல் நாம் ஆழமாக பொருள் தேட வேண்டிய சொல் ஆகும். பண்டு என்பது தனி மனித பண்பையும், பண்பாடு சமூகத்தின் பண்பையும் குறிக்கிறது. பண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட மக்களோடு அல்லது குழுவோடு தொடர்புடையது. பல்வேறு குழுக்கள் ஒரே பண்பாட்டு மரபைக் கொண்டுள்ளன என்று சொல்வது அல்லது கருதுவது பண்பாட்டை ஒரு படித்தானாகப் பார்ப்பதாகும். ஒரு சமுதாயத்தில் பல்வேறு குழுக்கள் இருக்கலாம். குழு என்பதை ஏதேனும் ஒரு பண்பாட்டு மரபைப் பொதுவாகக் கொண்டுள்ள மக்கள் கூட்டம் என்று வரையறுக்கலாம்.

பண்படுவது பண்பாடு ஆகும். மனம், சொல், செயல்களால் பிறருக்குத் தீங்கு செய்யாது, பொது நலத்துடன் வாழ்வதே பண்பாடாகும். உள்ளத்தளவால் திருத்தம் பெற்று ஒழுக்கத்துடன் வாழ்வதையே பண்பாடு எனலாம். பிறரின் நல்லியல்புகளை அறிந்து அதற்கேற்றவாறு தாமும் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்வது பண்பாடு என்று கூறலாம்.

1937-இல் டி.கே. சிதம்பரநாத முதலியார் 'Culture' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஈடாகத் தமிழில் பண்பாடு என்னும் சொல்லாட்சியை உருவாக்கினார் என்பர் பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை. "பண்படுவது பண்பாடு. பண்படுதல் சீர்ப்படுதல் அல்லது திருந்துதல், திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும் திருந்திய தமிழைப் 'பண்பட்ட செந்தமிழ்' என்றும், திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம் என்றும், பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், அது எல்லாப் பொருள்களையும் தமக்கும் பிறர்க்கும் பயன்படுத்துவது" என்றும் உரைக்கின்றார். (தேவநேயப்பாவாணர். ஞா, பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், ப.6)

விலங்காக வாழ்ந்தவன் பண்பட்ட நிலைமை அடைந்த போதே மனிதனாகக் கருதப் பெற்றான். குரங்கிலிருந்து மனிதனாக வளர்ச்சி பெற்றதைப் போன்று சிறிது சிறிதாக பண்பட்ட நிலையை அடைந்து முழுமை பெற்ற மனிதனாகத் திகழ்ந்தான்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்"(குறள்.996)

என்னும் திருக்குறளுக்கேற்ப, மனிதன் பண்புடையவனாக திகழ்வதாலேயே இவ்வுலகம் இன்றும் நிலைபெற்று வாழ்கின்றது. எனவே, உலகமும் உலகில் உள்ள உயிரினங்களும் நிலைபெற்று வாழ்வதற்குக் காரணமாகிய பண்பாட்டைப் பின்பற்ற வேண்டும். "மனித இனம் தன் பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும்." (பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.379).

காளையின் கொம்பிற்கு அஞ்சும் ஆடவரை முல்லைக்கலி பெண் இப்பிறவியில் மட்டும் இல்லாமல் அடுத்தப் பிறவிகளிலும் கூட விரும்ப மாட்டாள் என்ற கருத்தைக் கலித்தொகை பதிவு செய்துள்ளது.

**திருமணம்**

ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டு யாரும் அறிய வண்ணம் எட்டு வகை மணங்களுள் ஒன்றான அன்பின் ஐந்திணைக்குரிய கந்தருவத் திருமணம் புரிந்துக் கொண்டு உள்ளத்தாலும் உடலாலும் இணைவர் என்பதை,

"அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்

காமக்கூட்டம் காணுங் காலை

மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுளுள்" *(தொல்.பொருள்.களவு.1)*

இருவரின் ஒத்த அன்பே நம்பிக்கையாக இருக்கும், இருவரும் இணைந்து வாழ்வர். பின் நாளில் பொய்யும், தவறுகளும் தோன்றிய பின்னர் ஐயர் என்கிற பெரியோர் முன்னிலையில் திருமண முறை நடந்துள்ளது. இதனை,

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப" *(தொல்.பொருள்.கற்பு.நூ.2)*

என்னும் தொல்காப்பியரின் நூற்பா இதற்கு சான்றாகிறது.

"திருமணம் என்ற சொல்லை நாம் திரு+மணம் எனப் பிரிக்கலாம். மணம் என்பதே தமிழரின் பழைய மரபுதான். ஒரு கன்னிப் பெண்ணின் கூந்தலிலே மலர் சூட்டி அவளை ஊரும் உறவும் அறியத் தன் மனத்திற்கு இனியாளாக, வாழ்க்கைத் துணைவியாக ஒருவன் ஏற்றுக் கொள்வதனாலே தான் மணம் திருமணம் என்ற பெயர்கள் அச்சடங்கிற்கு ஏற்பட்டன. இவ்வாறு கணவனும் மனைவியுமாய் வாழத் தொடங்கும் நிகழ்ச்சிக்கு திருமணம் என்று பெயர்." *(தமிழர் திருமணம், முனைவர் வி.சி.சசிவல்லி, ப.7)* சமுதாயம் என்னும் கட்டமைப்பின் அடித்தளம் குடும்பம் ஆகும். இருமணம் இணைவது திருமணம் என்று இன்று வழங்கி வருகின்றனர். களவில் வாழ்ந்த இருவர் கற்பில் சேர்வது திருமணம் என்ற புனிதமான ஒன்றின் நிகழ்வாகும்.

"வேங்கை விரிவிட நோக்கி

வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே" *(கலி.38:25-26)*

"மன்றல் வேங்கைக் கீழிருந்து

மனநயந் தனன்நம் மலைகிழ வோற்கே" *(கலி.41:43-44)*

குறிஞ்சி நில மக்கள் வேங்கை மலரும் காலத்தில் திருமணம் செய்யும் மரபைக் கொண்டிருந்தனர். வேங்கை மரத்தின் கீழ் நின்று திருமணம் பேசி முடிப்பர். வேங்கை பூக்கும் காலம் திருமணம் நடத்தற்குரிய காலமாகக் கருதினர். திருமணம் பேசி உடன்படும் போது நல்ல இடமும் நல்ல நாளும் பார்ப்பது வழக்கம்.

"தையால் தம்பலந் தின்றியோ வென்றுதன்" (கலி.65:13)

ஒரு பெண்ணுக்கு, ஆண்மகன் தம்பலம் கொடுத்து அதை அவள் பெற்றுக் கொண்டாள் அவனுக்கு இசைந்தவளாகக் கருதப்படுகிறாள். அவளுடைய சம்மதத்தை தெரிவிக்க தம்பலம் பெறப்படுகிறது.

"தருமணல் தாழப்பெய் தில்பூவ லூட்டி

எருமைப் பெடையோ டெமரீங் கயரும்" (கலி.114:12-13)

"வரைப்பின் மணல்தாழப் பெய்து திரைப்பில்

வதுவையு மீங்கே அயர்வர் அதுவேயாம்" (கலி.115:19-20)

திருமணத்தின் போது வீட்டை அழகுபடுத்துவர். இங்குப் புதுமணல் பரப்பி, செம்மண் பூசி அழகுபடுத்தியதை அறியமுடிகின்றது. மேலும், பெண் எருமையின் கொம்பை வீட்டினுள் நட்டு வைத்து அதனைத் தெய்வமாகப் பாவித்து வழிபட்டமை அறியமுடிகிறது. இது ஆயர் தம் குலவழக்கமாகும். பெண் வீட்டில் திருமணம் நடைபெறுவதும் உண்டு.

**திருமணத்தில் தீ வலம் வருதல்**

திருமணத்தின் போது தீயினை வலம் வரும் செய்தி கலித்தொகையின் இந்த ஒரு பாடலில் மட்டுமே சுட்டப்படுகிறது. இதே போன்று மணமக்கள் திருமணத்தின் போது தீ வலம் வருவதை 'சிலப்பதிகாரம்' காட்டுகிறது. திருமணத்தில் தீ வலம் வருவது தமிழர் பண்பாடாகும். ஐம்பூதங்களில் ஒன்றான அக்னி பகவானை வணங்கி வரும் மரபு இருந்தது. இதனை,

"காதல்கொள் வதுவைநாள் கலிங்கத்து ளொடுங்கிய

மாதர்கொண் மானோக்கின் மடந்தைதன் துணையாக

ஒத்துடை யந்தனன் எரிவலஞ் செய்வான்போல்" (கலி.69:3-5)

காதலை உடைய மான் போன்ற பார்வை உடைய மங்கையுடன் தன் இம்மை மறுமைக்குத் துணையாக ஆகும். வேதம் ஓதும் அந்தணன் இருவரையும் தீ வலம் செய்யுமாறு சொல்லக் காதலனும் தலைகவிழ்ந்த காதலியும் அதனை வலம் வருவர். மேலும்,

“சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்

தீவலஞ் செய்து காண்பார்க ணோன் பெண்ணை” (சிலம்பு.1.1:51-53)

என்ற சிலப்பதிகாரப் பாடலில் கோவலனும், கண்ணகியும் தீ வலம் வந்து திருமணம் செய்தது குறிப்பிடப்பட்டுள்ளது.

**மனையாள் மாண்பு**

பண்டைய காலப் பெண்டிர் கணவனே கண் கண்ட தெய்வமாகப் போற்றி வாழ்ந்தனர். சுகம் - துக்கம் இரண்டிலும் கணவனுடன் இருப்பதையே இன்பமாகப் போற்றி வாழ்ந்தனர். செல்வக் குடும்பத்தில் பிறந்த தலைவி, தலைவனின் குடும்பத்தில் வறுமை வந்த போதும், தன் குடும்ப வறுமையைப் பெற்றோர்க்கு தெரியாமல் மறைத்து வாழ்வதே சிறந்த மனைவியின் பண்பாடென்று கருதினர். ஓர் அடையைக் கிழித்து இருவரும் உடுத்திக் கொள்ளும் வறுமை வந்துற்ற போதும் அன்பினால் ஒன்றி வாழ்வதே வாழ்க்கை என்றனர்.

“ஒரோகை தம்முட் டழீஇ ஒரோகை

ஒன்றன்கூட றாடை யுடுப்பவரே யாயினும்

ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை” (கலி.18:9-11)

என்ற பாடல்வரிகள் இதனை உணர்த்துகிறது. மேலும், கணவனின் இன்பத்தில் மட்டும் பங்கு கொள்பவள் நல்ல மனைவியல்லள். அவன் துன்பத்திலும் இன்பம் காண்பவனே நற்பெண் என்பதனை கலித்தொகையில் பெருங்கடுக்கோ கூறியுள்ளார். இதனை,

“அன்புறச் சூழாதே ஆற்றிடை தும்மொடு

துன்பம் துணையாக நாடி னதுவல்லது

இன்பமு முண்டோ எமக்கு” (கலி.6:9-11)

என்னும் வரிகளில் தலைவன் பொருள் தேட பிரியும் போது, தன்னையும் உடன் கொண்டு செல்ல வேண்டிய மனைவியிடம் காட்டின் கடுமையைக் கூறி மறுத்தான். அதற்கு மனைவி, கணவனுடன் சென்றால் துன்பமும் இன்பமாக மாறும் என்று கூறுவதில் இருந்து மனைவியின் மாண்பு வெளிப்படுகிறது.

கற்புடைய பெண்கள் வேண்டினால் மழையும் வேண்டியவுடனே வரும் என்பதை,

"அருமழை தரல்வேண்டில் தருகிற்கும் பெருமையளே" *(கலி.39:6)*

அத்தகைய கற்புடன் பெண்கள் இருந்தனர். மேலும்,

"தாம்பிழையார்கேள்வர்த் தொடுதெழலால்" *(கலி.39:17)*

பெண்கள் காலையில் தம்முடைய கணவனின் பாதம் தொட்டு வணங்கி தொழுது எழுவர். இத்துணை சிறப்புகளைப் பற்றி கலித்தொகைப் பாடல்கள் குறிப்பிட்டுள்ளன.

**இருமணம் கூடாப் பண்பு**

கலித்தொகையில் பெரும்பான்மையான பாடல்கள் சிறந்த தலைவனையும் தலைவியையும் காட்டுகின்றன. இவர்கள் சிறந்த பண்புடையவர்களாக விளங்கினர். இவ்வுலகையே பரிசாகப் பெற்றாலும் ஆயர் குலப் பெண் ஒருத்தி, தான் உள்ளத்தால் உள்ள மகிழ்கின்ற ஒருவனையல்லாமல் மற்றொருவனை மனத்தாலும் நினைத்து மணம் புரிய மாட்டாள் என்பதை,

"விரிநீ ருடக்கை உலகம் பெறினும்
மருநெறி யாயர் மகளிர்க்கு
இருமணம் கூடுதல் இல்லியல் பன்றே" *(கலி.114:18-20)*

இப்பாடலில் ஆயர்பெண் இருமணம் புரியமாட்டாள் என்ற உயர்ந்த பண்பை அறியமுடிகிறது.

***தமிழரின் அறப்பண்புகள்***

தமிழரின் அறத்தையும், பண்பாட்டையும் வலியுறுத்தும் கருத்துக்களை கலித்தொகையில் நெய்தற்கலிப் பாடலில் புலவர் கூறியுள்ளார். அவை வருமாறு,

"ஆற்றுத லென்பதொன்று அலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந்து தொழுகுதல்

*அன்பெனப் படுவது தன்கிளை செறாமை*

*அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்*

*செறிவெனப் படுவது கூறியது மறாமை*

*நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை*

*முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்*

*பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்" (கலி.133:6-14)*

- *ஆற்றுதல் என்பது இல்லற வாழ்க்கையில் வறுமை உற்றவர்க்கு ஒன்றை உதவுதல்.*
- *போற்றுதல் என்பது நட்பாகக் கூடினாரைப் பிரியாதிருத்தல்.*
- *பண்பு எனப்படுவது உலக ஒழுக்கம் அறிந்து ஒழுகுதல்.*
- *அறிவு எனப்படுவது அறியாதார் தன்னைப் பார்த்துச் சொல்லும் சொல்லைப் பொறுத்துக் கொள்ளுதல்.*
- *செறிவு எனப்படுவது கூறியது ஒன்றை தான் என்றும் மறவாதிருத்தல்.*
- *நிறைவு எனப்படுவது மறைவான ஒன்றைப் பிறர் அறியாது காத்தல்.*
- *முறை எனப்படுவது தீங்கு செய்தார் நம்மவராயினும் கண்ணோடாது அவர் குற்றத்திற்கேற்ப உயிரைக் கொள்ளுதல்.*
- *பொறை எனப்படுவது தன்னைப் போற்றாதவரிடம் பகை கொள்ளாது பொறுமையோடு இருத்தல்.*

*இத்தகைய நற்பண்புகளை தமிழர் அறமாக கொண்டு வாழ்ந்தனர்.*

*சங்க இலக்கியங்கள் நமக்கு வழிகாட்டியகவும் நற்பண்புகளையும் பண்பாட்டையும் கற்பிக்கும் ஆசானாகவும் திகழ்கிறது. கலித்தொகையில் தமிழரது திருமண முறைகளும் பண்பாட்டையும் இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.*

**துணை நின்றவை**

1. பரத்துவாசி நச்சினார்க்கினியர் (உரையாசிரியர்), (2002) - கலித்தொகை, முல்லை நிலையம், தி. நகர், சென்னை - 17.
2. விசுவநாதன்,அ., (உரையாசிரியர்), (2011) - கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 98
3. சிற்பி பாலசுப்பிரமணியம் (உரையாசிரியர்), (2012) - திருக்குறள், சிறப்புரை, தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., அம்பத்தூர், சென்னை - 98.
4. இளம்பூரனார் (உரையாசிரியர்), (2010) - தொல்காப்பியம் (எழுத்து - சொல் – பொருள்), சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை - 14.
5. சசிவல்லி.வி.சி., (2003) - தமிழர் திருமணம், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 113.
6. பக்தவத்சல பாரதி, (1999) - பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை - 108.